**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 17 /2019**

பெயர் – ராமையா ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022ம் ஆண்டு ஜுலை திங்கள் 08–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. 14.04.2018 வள்ளியூர் காவல் நிலைய குற்ற எண். 197/2018 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1.**

2. பார்வை மகஜர் ம.சா.ஆ.2.

3. வரைபடம் ம.சா.ஆ.3.

4. TN 72 BZ 0272 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4**

5. TN 72 BZ 8208 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5.**

6. காயச்சான்று **ம.சா.ஆ.6.**

7. குற்றபத்திரிக்கை **ம.சா.ஆ.7**

8. குற்றவழக்கில் பிறப்பிக்கபட்ட உத்தரவு நகல் **ம.சா.ஆ 8**

9. நாகர்கோவில் திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று நகல் **ம.சா.ஆ.9.**(ஆவணத்தின் நம்பகத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம்

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2022.07.08 17:58:39 +0530

ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆவணம் ஆட்சேபிக்கப்படுகிறது. ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

10. நாகர்கோவில் திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்த வயையில் செலவினங்களுக்கான ரசீது ரூ.10,620/-**ம.சா.ஆ.10.** (ஆவணத்தின் நம்பகத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆவணம் ஆட்சேபிக்கப்படுகிறது. ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

11. ஸ்கேன் ரிப்போர்ட் **ம.சா.ஆ.11**

12. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.12**

13. எனது வங்கி கணக்கு சேமிப்பு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.13**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எனது வயது வேலை வருமானத்தை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் .நான் தற்போது வேலைக்கு போகவில்லை விவசாய வேலை பார்க்கவில்லை மாடு மேய்க்கிறேன். விபத்து நடந்த போது நான் இருசக்கர வாகனத்தில் போனேன். விபத்து நடந்த ரோடு மீரா ஜீவல்லரி கடை முன்பு என்றால் சரிதான். அந்த ரோடு பஸ், கார், வண்டிகள் செல்லக்கூடிய போக்குவரத்து நெரிசல் உள்ள ரோடு என்றால் சரிதான் முன்னால் சென்ற எனக்கு பின்னால் சென்ற வாகனத்தை பார்க்க முடியாது என்றால் சரியல்ல. லைசன்ஸ் இல்லை என்றால் இருந்தது தொலைந்து விட்டது. நான் விபத்து சமயத்தில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது காயத்தின் தன்மை மற்றும் அதன் பாதிப்பை தெரிய படுத்த அரசு மருத்துவமனை மருத்துவக்குழு முன்பு ஆஜராகி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதார் வாகனத்தை ஓட்டியவர் எந்த வகையில் பொறுப்பு இல்லை அதனால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்வர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவமனை ர சீதுகள் மற்றும் ஆவணங்கள் வழக்கிற்கு உற்பத்தி செயயப்பட்டது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கேட்ட இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை-</u>** இல்லை

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2022.07.08 17:58:44 +0530